**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 98/2009**

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ஆம் நாள் திங்கள் கிழமை **வா.சா.2.** (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.A.இந்திரா, மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனலெட்சுமி | வயது | : |
| க/பெ | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : |
| கிராமம் | : | மாவட்டம் | : |
| வட்டம் | : | | |

---

<u>வா.சா. 2–ன் முதல் விசாரணை</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை).**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) எனது மாமனார் பெயர் சாமிக்கண்ணு. எனது கணவர் வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்து எனது மாமனார் கிரையம் பெற்ற சொத்தாகும். எனது மாமனார் 05.05.1947 ல் ஆதிமூலம் படையாட்சி என்பவரிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். எனது மாமனார் கிரையம் பெற்ற சொத்து தான் எனது கணவரும், மாமியாரும் அனுபவம் செய்து வந்து வாதிக்கு கிரையம் கொடுத்தனர் என்றால் சரிதான். எனது மாமனார் வாதிக்கு கிரையம் கொடுத்த அளவு கொண்ட சொத்து தான் நாங்கள் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனது மாமனார் பெற்ற கிரைய ஆவணத்தில் மேல்புறம் நான்கெல்லையாக அப்பாசாமி என்று கண்டு தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், அதே நான்கெல்லையை கண்டு தான் எனது கணவரும், மாமியாரும் கிரையம் கொடுத்தனர் என்றால் சரிதான். மேற்படி கிரைய சொத்தின் மேல்புறம் நான்கு நபர்களுக்கு பாத்தியம் என்றால் அவ்வாறு எனது கணவர் சொல்லி தெரியும், அவர்களை எனக்கு தெரியாது. எனது மாமனார் கிரையம் வாங்கிய நான்கெல்லையை எனது கணவரும், மாமியாரும் பாதை என மாற்றி கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல, கிரைய சொத்திற்கு மேற்புறம் பாதை இருந்தது, அதை நாங்கள் 40 வருடங்கள் அனுபவம் செய்து வந்தோம்.

2) தற்போது மேற்படி பாதையில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியுள்ளனர்கள் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் அவர்களிடத்தில் கட்டிடம் கட்டியுள்ளனர், பாதை பாதையாக தான் உள்ளது. எனது மாமியாரும், கணவரும் கிரையம் கொடுத்த காலத்தில் தான் தாவா சொத்து பகுதியை நான் பார்த்தேன், அதற்கு பின்பு நான் பார்த்தது இல்லை. எனது மாமனார் ஆதிமூலம் படையாட்சியிடமிருந்து கிரையம் பெற்ற விஸ்தீரண அளவிற்குள் தான் வடபுறம் தோட்டத்திற்கு செல்லக்கூடிய பாதை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குடிநீர் குழாய் அமைத்துள்ளோம் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறோம் என்றால் நாங்கள் விற்பதற்கு முன்பே அந்த குழாய் இருந்தது. நான் எனது முதல் விசாரணையில் மேற்படி குழாய்யை வாதி தான் அமைத்தார் என்று சொல்லிவிட்டு தற்போது நாங்கள் தான் அமைத்தோம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் காலத்திற்கு முன்பே தாவா சொத்தில் புழங்குரிமை பாத்தியம் உள்ளது என்று நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே இடம் சம்பந்தமாக நாங்கள் ஏதேனும் பஞ்சாயத்து பேசினோமா என்றால் இல்லை. தாவா சொத்து பாதை சம்பந்தமாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் ஏதேனும் உடன்பாடு ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் சொந்தம் என்றாலும், எனது மாமனாருக்கோ, வாதிக்கோ தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் வாங்கிய கீழ்மேல் 25 அடி காலடி அளவிற்குள் தான் வடபுறம் தோட்டத்திற்கு போகவர பாதை எனக்கண்டு 05.05.1947 தேதிய கிரைய ஆவணத்தில் மாமனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் நாங்களோ, வாதியோ தாவா சொத்தை எந்தகாலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு நெருங்கிய உறவுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/கி.தனலெட்சுமி/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.